காரைநகர், பயிரிக்கூடல்

## அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில்

இராஜ கோபுர மஹா கும்பாபிஷேக
மணிமண்டபத் திறப்புவிழா (08.09.2007)
அன்று வெளியிடப்பட்டது.



# காரைநகர் தலப்பாடல்கள்

உ

*சிவமயம்*

காரைநகர், பயிரிக்கூடல்

## அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி கோயில்



# காரைநகர் தலப்பாடல்கள்

உ
சிவமயம்

# காரைநகர், பயரிக் கூடல்
# சுப்பிரமணிய சுவாமிகள் கோயில்
# ஊஞ்சல் பாடல்

1927ஆம் ஆண்டு
காரைநகர் நடுத்தெரு நாகமுத்துப் புலவராற் பாடப்பட்டது.

திருச்சிற்றம்பலம்

**விநாயக வணக்கம்**

பூமேவுங் காரைநகர்ப் பயரிற் கூடற் பொற்கோயில்
எழுந்தருளும் புலவர் கோமான்
சேமேவும் புண்ணியனார் தந்த செல்வன்
செயசுப்பிர மணியபிரான் திருத்தோண் மீது
மாமேவு மூஞ்சற் பாமாலை சூட்ட மாங்கனிக்
காய்த் தந்தை வலம் வந்த முன்னோன்
காமேவு மும்ம தம்பாய் களிறாம் பெம்மான்
கமலவடி நாயடியேங் காப்பதாமே.

**நூல்**

நலந்திகழு மறை நான்குங் கால்களாக
நசை திகழு மாகமங்கள் விட்ட மாகப்
பலந் திகழு மெண்ணெண்ணூல் கயிற தாகப்
பதந் திகழு மாறங்கம் பலகையாக
வலந் திகழு பிரணவமே பீடமாக
வரந் திகழு மழகொழுகு மூஞ்சன் மீது
புலந் திகழுங் காரைநகர்ப் பயரிக் கூடற்
புனித சுப்பிர மணியரே யாடீரூஞ்சல். (1)

அம்பரத்தி லணியணிய தாகப் போக
வமையுடுக்கள் நவமணியார் மாலையாக
விம்ப சுடர் ஞானமே தீபமாக
விளங்குநா தாந்தமா லத்தி யாகத்
தும்புரு நாரக ரிருவர் கீதந் தேங்கத்
துலங்கு சந்திராதித்தர் கவிதை தாங்க
உம்பர் புகழ் காரைநகர் பயரிக்கூடல்
உசித சுப்பிர மணியரே யாடீரூஞ்சல் (2)

முன்னு குண மூன்றுமுன்னர் முறைகேட்டுய்ய
முறைமை யறம் பொருளின்பம் வீடுநான்கும்
பன்னுமுயர் சாமரையின் பந்தியாகப்
பகர் வீடு கர்ப்பூர விளக்குமாக
மின்னு மன்பு மலராலே யடியார் சேர்ந்து
விரும்புவன பெறுதற்கே வேண்டி யேத்தத்
துன்னு பலவளபயரிக் கூடன் மேவுஞ்
சுகுண சுப்பிர மணியரே யாடீரூஞ்சல். (3)

திங்கண்முக முடையவரே யாடீரூஞ்சல்
திரிபுவனம் பரித்தவரே யாடீரூஞ்சல்
அங்கையில் வேல் தரித்தவரே யாடீரூஞ்சல்
அரியகலை யாகரரே யாடீரூஞ்சல்
மங்குல்நிகர் குஞ்சியரே யாடீரூஞ்சல்
மலைக்குறிஞ்சி நாயகரே யாடீரூஞ்சல்
சங்கைவளக் காரைநகர் பயரிக்கூடற்
றலைவ சுப்பிரமணியரே யாடீரூஞ்சல். (4)

கண்மணியே பொன்மணியே யாடீரூஞ்சல்
கலாமணியே சிகாமணியே யாடீரூஞ்சல்
தண்மணியே தலைமணியே யாடீரூஞ்சல்
தவமணியே தனமணியே யாடீரூஞ்சல்
பண்மணியே விண்மணியே யாடீரூஞ்சல்
பழவடியார் புகழ்மணியே யாடீரூஞ்சல்
எண்மணியே காரைநகர்க் கூடல்வாழும்
இறைவசுப்பிர மணியரே யாடீரூஞ்சல். (5)

கங்கைபிறை சடைக்கணிந்த கருணைவள்ளல்
களிப்புடனே கிருபைசெய்து கடைக் கணோக்க
துங்கதவ வீரருடனிலட்சம் பேர்கள்
சூழ்ந்து நின்றே யேவிய நின்பணிகள் செய்ய
பங்கயன்மா லாதியோர் பணிந்துபோற்றப்
பாங்கிற் குஞ்சரிவள்ளி பரவி யேத்த
சங்கை வளக்காரைநகர்க் கூடல் வாழுந்
தலைவ சுப்பிரமணியரே யாடீரூஞ்சல். (6)

புத்தியுள வரமகளீர் வடந்தொட்டாட்டப்
புடையிலே முனிவரர் மெய்ப் புளகங்காட்டப்
பத்தியுள தேவர்துதி பரவை யோட்டப்
பாமகளும் பூமகளும் பண்ணைக் கூட்ட
அத்திமுகன் றம்பியரே யாடீரூஞ்சல்
அரனுமையார் திருமகரே யாடீரூஞ்சல்
மத்திருதி காரைநகர்க் கூடன் மேவும்
வரத சுப்பிர மணியரே யாடீரூஞ்சல். (7)

அந்தமிலா வருளொழுகு வாகுமாட
அழகமரு சதங்கைகலின் கலினென்றாட
செந்திருவார் பாடகங்கள் மதாணி யாடத்
திகழ் கோழிக்கொடி மஞ்ஞை சிறந்தேயாட
எந்தனகக் கோயிலுறை யிணைக் காலாட
எவ்வுயிர்க்கு மிருப்பிடமா மிறைவனாட
மந்திரமார் காரைநகர் பயரிக்கூடல்
மருவு சுப்பிர மணியரே யாடீரூஞ்சல் (8)

கள்ளிருந்த கூவிளங் கண்டிகையு மாடக்
களபமுப வீதமொளி கலந்தே யாட
உள்ளிருந்த வரை ஞாணும் கச்சுமாட
வுயரு மோங்கார வொளி உயர்ந்தேயாட
நள்ளிருந்த கானகத்தே வள்ளியம்மை
நாயகியை மணந்தவரே யாடீரூஞ்சல்
வள்ளிருந்த காரைநகர் பயரிக் கூடல்
வரத சுப்பிர மணியரே யாடீரூஞ்சல் (9)

தாயாகித் தந்தையாய்த் தானாய்நின்று
தண்ணளியைச் சுரப்பவரே யாடீரூஞ்சல்
மாயோன்றன் மருகரே யாடீரூஞ்சல்
மறை முடியிலிருப்பவரே யாடீரூஞ்சல்
நாயேனை யடிமை கொண்டீ ராடீரூஞ்சல்
நலிமிடியைத் துடைப்பவரே யாடீரூஞ்சல்
சேயாகுங் காரைநகர்ப் பயரிக் கூடற்
செய சுப்பிர மணியரே யாடீரூஞ்சல் (10)

## வாழி

சீர்மருவு மந்தணர்கள் சைவம் வாழி
திருநீறு மறைநான்கைந் தெழுத்து வாழி
ஊர்மருவு மன்னர்செங்கோல் பசுக்கள் வாழி
உயராக மங்கலைக ளறங்கள் வாழி
பேர்மருவு மழைமகளீர் கற்பு வாழி
பிணையூஞ் சலியற்று வித்த பெரியோர் வாழி
ஏர்மருவு மிதைப்படிப்போர் கேட்போர் செய்தோர்
எம்மிறை சுப்பிரமணியர் வாழி வாழி.

## எச்சரீக்கை

திருவார் காரைப் பயரிக்கூடற் றேவே எச்சரீக்கை
திடமார் சத்திவேலேந்திய செல்வா எச்சரீக்கை
குருவார் மத்தைமதிசூடியின் குருவே எச்சரீக்கை
குணபூஷணி யுமையார்பெறு குருந்தே எச்சரீக்கை
கருமார் மறைமுடிமேலுறை கருத்தா எச்சரீக்கை
கருணாசர வரதாமலர்க் கரத்தா எச்சரீக்கை
தருவார் தெய்வயானைவள்ளி தலைவா எச்சரீக்கை
தகைசால் சுப்பிரமணியா கலைச்சதுரா எச்சரீக்கை.

## பராக்கு

கதிக்கு வழிகாட்டுகின்ற கண்ணே பராக்கு
கருணை பொழியறுமுகங்கொள் கடம்பா பராக்கு
விதிக்கு விலங்கிட்டுவைத்த விமலா பராக்கு
விண்ணாதி யைம்பூதமாய் விரிந்தாய் பராக்கு
துதிக்கு மடி யோரின்னல்கள் துடைப்பாய் பராக்கு
தூயமயிற் பரியேறிய துரையே பராக்கு
நிதிக்கு வையினும்மதிக்கு நிமலா பராக்கு
நிலவுசுப்பிர மணியகூட நிதியே பராக்கு.

## லாலி

சிட்டரடி யவர்மறையோர் தெளிந்த முனிவரர்கள்
சேர்ந்திறைஞ்சு பயரிக்கூடற்றெய்வசிகாமணியே லாலி லாலி
நாவலர்கள் பாவலர்கள் நான்மறை களாதி
நாடியறி தற்கரிய ஞானபரம் பொருளே லாலி லாலி
வீரமுள்ள சூர்கிளைகள் வீட்டியெங்கள் குறையும்,
வீட்டியருள்மழைபொழியும் விமலபரம்பொருளே லாலி லாலி

## மங்களம்

*இராகம்: சுருட்டி* *தாளம்: ஆதி*

மங்களம் மங்களம் மங்களம் நித்திய சுப
மங்களம் மங்களம் மங்களம்.

மங்கை வள்ளிநாயகர்க்கு மாதுமையாள் சேயருக்குச்
சங்கைவடி வேலவற்குச் சித்திரம யூரருக்கே மங்களம்
குஞ்சரி மணாளருக்குக் கூறமென் கண்ணாளருக்கு
மஞ்சரி கடம்பினர்க்கு மாப்பிளந்த வீரருக்கு மங்களம்
ஆதிமறை நாதருக்கு ஆனைமுகன் பின்னவற்குச்
சோதி சிவன்பாலருக்குச் சுப்பிரமணியருக்கு மங்களம்
நாகமுத்தின் பாவருக்கு நாலு கவி வாணருக்குப்
போகமுத்தர் கூடலுறை புண்ணிய சொரூபருக்கு மங்களம்

திருச்சிற்றம்பலம்
சுபம்

## கட்டளைக் கலித்துறை

ஆராயிரத்துத் தொளாயிரத் தீர்பத்தே மூாண்டு மதி
சீராருஞ் சித்திரை சொன்மாலை யூஞ்சல் திருக்குகற்குப்
பேராருங் கன்னன் கணபதிப்பிள்ளை சொல் பெற்றியினாற்
சேராத பாவலன் நாகமுத்துப்பிள்ளை சூடினனே.

உ

காரைநகர் - களபூமி

திக்கரை முருகமூர்த்தி

# திருப்பொன்னூஞ்சல்

ஆக்கியோன்:-

அளவையூர், அருட்கவி சீ.விநாசித்தம்பிப்புலவர்

திருச்சிற்றம்பலம்

**காப்பு**

எண்ணுபவர் மனத்திருக்கும் எம்பி ரானே
ஏகாந்த வாழ்வுதரும் தும்பி நாதா
கண்ணுதலான் கருதியருள் கணேசமூர்த்தி
கைதொழுவார் வினையறுக்கும் விக்ன ராஜா
வண்ணமிகு காரைநகர் - களபூமி என்னும்
வளர்பதிசேர் திக்கரையில் வதியும் செவ்வேட்
புண்ணியனின் பொன்னூஞ்சல் புனைய நின்றாட்
போதினையென் புந்திவைத்தேன் காப்பதாமே.

**நூல்**

பார்பூத்த சராசரங்கள் பாசம் நீங்கிப்
பரானந்தத் தேனீரிற் படிந்துவக்கத்
தார்பூத்த சங்கரனும் சிவையுந் தந்த
சரவணனே வேலேந்தித் தவக் குறத்தி
பேர்பூத்த கஜவல்லி பாச னாகிப்
பிரகாச மயிலேறித் தொண்டர் பேணும்
தேர்பூத்த காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடீ ரூஞ்சல். 01

ஓமென்ற பிரணவமே விட்டமாக
ஓங்கும்தத் துவங்கண்மேல் வட்டமாக
நாமமுயர் நான்குமறை தூண்களாக

நவின்றசிவா கமங்கணெடு நாண்களாக
சேமமிகு திருமுறைகள் மாலையாக
செப்பிடுமா புராணங்கள் சோலையாக
தேமலர்க்காக் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடீ ரூஞ்சல். 02

ஆதவனும் அம்புலியும் கவிகை தாங்க
அக்கினியும் சலபதியும் கவரி வாங்க
மாதவனும் சிவனுமையும் தாமம் சூட
மறையவனும் கலைமகளும் வேதம் பாட
பூதகணம் தேவகணம் விருது காவ
பொருந்துகண பதியாசி மலர்கள் தூவ
சீதவயற் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடீ ரூஞ்சல் 03

ஐங்கரனார் பழம்வாங்க ஆண்டி யாகி
அருட்பழமாய் ஆவினன் குடியில் நின்று
தங்குதிருக் கைலாயக் காட்சி காட்டும்
சற்குருவே தமிழ்வளர்த்த சக்தி வேலா
துங்கமிகு மசுரர்குல மழித்து வானோர்
துயர்துடைத்த பாஸ்கரனே நீப மார்பா
செங்கமலக் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடீ ரூஞ்சல். 04

முந்து மறைப் பொருள்கேட்டு முளரி யானை
முதசிறைவிட் டப்பனுக்கு ஞானம் சொன்ன
கந்தனெனச் சிந்தனைசெய் யடியார் நெஞ்சில்

கற்பகமாய்ச் சதானந்தச் சோதி யாகி
அந்தமிலா வாழ்வுதரும் அழகா, கௌரி
அணிமுலைப்பா லுண்டறுவர் பாலு முண்டு
செந்தமிழ்வாழ் கார்ரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடீ ரூஞ்சல். 05

நற்பதத்தார் நடுநாடி வெளியிற் காணும்
ஞானகுரு மாமணியே நான்கு வேதச்
சொற்பதமும் கடந்துமிளிர் துரியா தீதச்
சுடர்விளக்கே சுவையாத சுவையே ஆறு
வெற்பிலுறை இரத்தினமே வினை தணிக்கும்
வேல்மருந்தே சந்ததமும் தொண்டர் போற்றச்
சிற்பமிகு காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடீ ரூஞ்சல். 06

சத்திதழு வருளேறு முகங்களாறும்
தவவாழ்வு வழிகாட்டும் கரமீ ராறும்
அந்திமகள் நல்விமகள் பொருந்து தோளும்
அகராதி யட்சரங்கள் அமைந்த வேலும்
முத்திதரும் திருக்கழலும் முறுவல் வாயும்
முத்துமணிக் குழையொடருள் விழியும் காட்டி
சித்திரத்தேர்க் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடீ ரூஞ்சல் 07

அறந்திகழும் கரமாட முகங்க ளாட
அன்புமலர் விழியாட செவிக ளாட
பிறந்தமறை வாயாட மகுட மாட

பெருங்கருணைக் கழலாட வடிவே லாட
குறந்தருவாய்க் குறத்தியுங்குஞ் சரியு மாட
கோலமயி லாடவயக் கோழி யாட
சிறந்தகலைக் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே ஆடீ ரூஞ்சல். 08

வெங்காள கண்டரொடு உமையா ளாட
விநாயகரும் நாரணனும் அயனு மாட
சங்கீத வாணிமலர் மாமி யாட
தருவீர சோதரரும் சுரரு மாட
மங்காத மண்டலமீ ரேழு மாட
வருகோளு மூவொன்பான் நாளு மாட
சிங்காரக் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே யாடீ ரூஞ்சல். 09

நரைஔளவை கவிகேட்ட நாவற் பாலா
நக்கீரர் துயர்தீர்த்த ஞான சீலா
வரைகிழியச் சமரிட்ட வெற்றி வேலா
வருமடியார் பவமறுக்கும் கால காலா
துரைமணியாய் மதுரையர சாண்ட நீதா
தொல்லமணர் கழுவேற வென்ற நாதா
திரைகடல்சூழ் காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே ஆடி ரூஞ்சல். 10

வான் செழித்த வேலுடையீர் ஆடீரூஞ்சல்
மறை செழித்த காலுடையீர் ஆடீரூஞ்சல்
மான் செழித்த கரன்மைந்தா ஆடீரூஞ்சல்

வரம் செழித்த கரக்கந்தா ஆடீரூஞ்சல்
ஊன் செழித்த ஊறறுப்பீர் ஆடீரூஞ்சல்
உளம் செழித்த பிழைபொறுப்பீர் ஆடீரூஞ்சல்
தேன் செழித்த காரைதிக் கரையின் மேவும்
சிவமுருக மூர்த்தியே ஆடீரூஞ்சல். 11

## வாழி

திக்கரை முருக மூர்த்தி சேவடி வாழி அன்னான்.
பக்கல் வாழ் தெய்வயானை பயில்வள்ளி வாழி செவ்வேல்
மிக்குயர் கீர்த்திவாழி மிளிர்மயில் சேவல் வாழி
பக்குவ ஞான சைவப் பரம்பரை வாழி வாழி.

தருணமா மழையால்பூமி தருவளம் நிறைந்து வாழி
குருமுறைச் சமயமாண்பு குலவிடு மக்கள் வாழி
திருமுறைச் செல்வம் வாழி சீவகா ருண்யம் வாழி
மருவிய தொண்டர் கூட்டம் மகிழ்வுற வாழி.

## எச்சரிக்கை

அருட்பேறு தருங்கருணைக் கையாளச்ச ரிக்கை
ஆடும்மயில் ஏறிவரும் ஐயாளச்ச ரிக்கை
மருட்பாச விடரறுக்கும் வரதாளச்ச ரிக்கை
மதிதருநாற் கதிகூரக்கும் சரதாளச்ச ரிக்கை
பொருட்பேற்றைத் தருசெய்யாள் மருகாளச்ச ரிக்கை
புலனூறி வருயோக குமராளச்ச ரிக்கை
திருக்காரை திக்கரைவாழ் தேவா எச்ச ரிக்கை
சிவமுருக சரவணசண் முகவாளச்ச ரிக்கை.

## பராக்கு

நீராரும் வேணியரின் மகனே பராக்கு
நீலமயி லேறிவரும் குகனே பராக்கு
ஊராரும் குறவள்ளி கணவா பராக்கு
ஓங்குகுஞ் சரிமருவு துணைவா பராக்கு
கூராரும் வேலேந்தும் குருவே பராக்கு
குறியாது குறித்தறியும் உருவே பராக்கு
சீராரும் காரைத்திக் கரையாய் பராக்கு
சிவமுருக சரவணசர்க் கரையாய் பராக்கு.

## லாலி

மருக்கோலச் சுந்தரனே லாலி லாலி
வளர்சுருதித் தந்திரனே லாலி லாலி
குருக்கோல நாயகனே லாலி லாலி
குன்றாடும் தூயவனே லாலி லாலி
உருக்காட்டி உணர்விப்பாய் லாலி லாலி
ஒளிகாட்டி உள்நிற்பாய் லாலி லாலி
திருக்காரைத் திக்கரையாய் லாலி லாலி
சிவமுருக மூர்த்தியே லாலி லாலி.

## மங்களம்

அண்ணல் விநாயகற்கு ஜெயமங்களம் - தில்லை
அம்பல வாணனுக்கு ஜெயமங்களம்
வண்ண நடேஸ்வரிக்கு ஜெயமங்களம் - அரி
வரத முகுந்தனுக்கு ஜெயமங்களம்
கண்ணருள் வைரவர்க்கு ஜெயமங்களம் அருட்
கவிதரும் கலைமகட்கு ஜெயமங்களம்
திண்வள்ளி குஞ்சரிக்கு ஜெயமங்களம் - காரைத்
திக்கரை முருகனுக்கு ஜெயமங்களம்.

சுபம்

ஓம்
உ
மாரியம்மன்துணை

## காரைநகர், பாலாவோடை ஸ்ரீ முத்துமாரி

# திருவூஞ்சல், எச்சரிக்கை, பராக்கு, மங்களம்

பிரம்மஸ்ரீ க.பரமசாமிக் குருக்கள் கணேச சர்மா (மறுபிரசுரம்)

திருச்சிற்றம்பலம்

### விநாயகர் காப்பு

சீரியலுங் காரைநகர் சேர்பாலா வோடைவளர்
மாரியம்மை ஊஞ்சல் வனைவதற்குப் - பார்பரவும்
வென்றி மதவேழ விநாயகன்றாள் உள்ளத்தே
நின்று நிலாவுகவே நீடு.

### முத்துமாரியம்மையை வேண்டுவது

எண்ணிற் பிறவி யெடுத்து நொந்தெய்தேன்
மண்ணில் மிகவருந்தி மாய்கின்றேன் - நண்ணலுற்ற
புண்ணித்தா லூஞ்சல் புகலமுத்து மாரியம்மே
கண்ணின் மணி போலிருந்து கா.

### நூல்

சீர் தவழும் நால்வேதம் கால்களாக
திருவளரும் ஆகமங்கள் விட்டமாக
ஏர் தருபொன் நவமணிகள் கயிறதாக
இலங்குதிருப் பிரணவமே பீடமாகப்
பார் பரவும் அருளூஞ்சல் தன்னிலேறிப்
பண்பாடு நிறைசெல்வம் வாய்த்தமக்கள்
சார் புகழ்ப்பா லாவோடை யமருந்தாயே
தழுவுமுத்து மாரியம்மே யாடீரூஞ்சல். 01

மழை பொழியும் மேகநிற மேனிமின்ன
வையமெலாம் காக்குமருள் முகத்தேதுன்ன
கழை போலும் புயங்களிற்பல் படையிலங்க
கழல்சிலம்பு சதங்கைதிருக் கால்துலங்க
பிழை களெலாம் பொறுத்தெமக்கு அருளுமம்மே
பேணியுளம் உவந்தன்போ டாடீர் ஊஞ்சல்
விழை தகுபா லோவோடை மேவுந்தாயே
மேன்மைமுத்து மாரியம்மே யாடீரூஞ்சல். 02

மங்கள வாத்திய வொலிகள் ஆர்ப்ப ஆர்ப்ப
மறையவர்தம் வேதவொலி மண்விண்போர்ப்ப
திங்களணி சங்கரனார் உவகை பூப்ப
தேவர்கரம் குவித்துமலர் மாரி தூர்ப்ப
இங்குள்ள பக்தர் தமிழ் வேதமோத
எழில் தவழும் பொன்னூஞ்சல் ஏறி யன்பர்
தங்கும் பாலா வோடை வாழ வாழும்
தாயே எம் மாரியம்மே யாடீருஞ்சல். 03

மின்னலெழிற் கலைமகள்நின் றூஞ்ச லாட்ட
விரிகுழலும் அணிகலனும் அசைந்தே யாட
வண்ணமுள்ள திருவாசி தானு மாட
மன்னுமுல குயிரனைத்தும் மகிழ்ந்தே யாட
முன்னுமணஞ் சேர் கதம்ப மாலை யாட
மூவகையாம் ஞானமுற்றோர் அடிகள் சூட
இன்னருட்பா லாவோடை யமருந் தாயே
எங்கள் முத்து மாரியம்மே யாடீரூஞ்சல். 04

செந்தாமரையாள் தம்புராவை மீட்ட
திகழுமருட் கலைமகள் இன்னிசைகள் பாட
இந்திரனும் சந்திரனும் இருபாலாட
இரு மருங்கும் அவர் மகளிர் தழுவிக் கூட
முந்துமரம் பையர் பரத நட்ட மாட
முக்கனுடைப் பெருமானும் நிர்த்தமாட
சந்ததம் பாலாவோடை தன்னில் வாழும்
தாயே எம் மாரியம்மே யாடீரூஞ்சல். 05

திருமுடிமேற் சந்திரவெண் குடைநிழற்ற
தேவ கன்னியர் மருகிற்கவரி சுற்ற
இருபாலும் ஆலவட்டம் பெண்கள் பற்ற
எழில் தவழ் சிங்கக்கொடியை மாதர் பற்ற
பெரு நெருக்கமுடன் சபையில் வலியோர் முற்ற
பேதுற்று வலு வற்றோர் பின்னே நிற்க
அருகுகடல் பாலாவோடை யுற்ற
அன்பு முத்து மாரியம்மே யாடீரூஞ்சல். 06

துங்கமுள நவசித்தர் போற்றித் துதிக்க
தொகையடங்கா அண்டத்தோர் போற்றிவந்திக்க
அங்கதனார் மனங்கலங்கி வணங்கி நிற்க
அயனாரும் மற்றோரும் தாழ்ந்து போற்ற
செங்கமலப் பாதத்தை மக்கள் கண்ணிலொற்ற
சீரான ரூபமும் அரூபமுமான
தங்கு பாலாவோடை தன்னில் வாழும்
தாயே எம் மாரியம்மே யாடீரூஞ்சல் 07

நித்திய பூசனை புரிவார் இன்பம் பூண
நின்வதன மெழில் இலங்கு கோலங்காண
சத்தியம் நற்புத்தி முத்திசித்தி சேர்க்கும்
தண்ணளிகூர் கயற்கணியே யாடீரூஞ்சல்
பக்தி புரிவார்க்கபய வரம் நல்கும்
பலவளமும் நிறை காரைநகரைச் சேர்ந்த
உத்தமி பாலாவோடை தன்னில் வாழும்
உயர்முத்து மாரியம்மே யாடீரூஞ்சல். 08

ஆதி நடு ஈறாகி அரிய அம்மே
அன்பருணர்ந்தோத மிகஉரிய அம்மே
நீதி வடிவான நிலைத்துரிய அம்மே
நீங்கா நோய் தீர்க்கவல்ல பிரியஅம்மே
ஓதி யுணர்தற்கரிய பெரிய அம்மே
உலகமெலாம் படைத்துக்காத்தருளும் அம்மே
சோதி உருவாய்ப் பாலாவோடை வாழும்
சுகந்தமுத்து மாரியம்மே யாடீரூஞ்சல். 09

## எச்சரிக்கை

திகழ்கின்ற மெய்ஞ்ஞான சித்தியனுபவநிலை
தெளிந்திட வயங்கும் முத்துமாரியம்மைக்கு எச்சரீக்கை
புகழ்கலையாதி நிலையிலே சக்தி சத்தாகிக்
கலந்தோங்குகின்ற முத்துமாரியம்மைக்கு எச்சரீக்கை
இகழ்மனப்பேயை யுள்ளூறவடக்கி
மெய்ச்சுக மெனக்கீந்த முத்துமாரியம்மைக்கு எச்சரீக்கை
நிகழ் கலியுகந்தன்னில் மக்கள் பிணியைப் போக்கவல்ல
பாலாவோடை முத்துமாரியம்மைக்கு எச்சரீக்கை. 10

## பராக்கு

ஐயம் தவிர்த்துடலுயிர்ப்பிணி யனைத்தையும்
அகற்றும் அம்மைக்குப் பராக்கு
ஒன்பது வாயிற் கூண்டில் ஒடுங்கி
உயிர் உய்யும்வண்ணம் காக்கும் ஆச்சிக்குப் பராக்கு
ஓங்கார மென்னும் எழுத்தினுள்ளே விளங்குகின்ற
ஆயிரங் கண்ணிக்குப் பராக்கு
ஔவியம் பேசாவண்ணம் ஆட்கொண்டருளும்
பாலாவோடை முத்துமாரியம்மைக்கு பராக்கு. 11

## வாழி

படியமுதுநல்கும் அறங்காவலர் குடும்பமது
பலபேறும் பெற்று வாழி
பதிவிரதையர் வாழி பசுவாழி
முகில்வாழி பன்னுநல் அரசுவாழி
அடியுன்னுமடியவர் வாழி அமரர் வாழி
தமிழ்வாழி சைவம் வாழி
அந்தணர் வாழி உயர்காரைநகர் வாழி
இங்கமர்ந்திடும் மக்கள்வாழி
நடைமண்ணும் உத்தமர்கள் சந்தானம் வாழி
உயர்விரதியர் தாமும்வாழி
நான்குகுரவர் வாழி வையகம் வாழி
மன்னுயிரெல்லாம் பெருகிவாழி
கொடியநோய் தவிர்த்தின்பமுதவு
பாலாவோடை மாரியம்மாளும் வாழி
குணமுள்ள அர்ச்சகர் அந்தணப்
பெருமக்கள் நாற்பேறுடன் வாழி வாழி.

## மங்களம்

**பல்லவி**

சுப மங்களம் நித்திய மங்களம்

**அநுபல்லவி**

சிங்கமீ தேறும் மாரியம்மைக்கு
அங்கயற் கண்ணிக்கு மங்களம் (சுப)

**சரணம்**

செம்பொன்னூஞ்சலாடும்
பாலாவோடை மாரியம்மைக்கு
பாடுவோம் -மங்களம்

திருச்சிற்றம்பலம்

சுபம்

உ

யாழ்ப்பாணம், காரைநகர் வாரி வளவென வழங்கும்

## கும்பரைப்புலத்தில் எழுந்தருளியிருக்கும்

# கற்பக விநாயகர்

# திருவூஞ்சல்

திருச்சிற்றம்பலம்

### காப்பு

சீர்மேவு மதி நதியோடரவு சூடுஞ்
சிவபெருமா னுமையருஞ் செல்வனாகிப்
பார்மேவு காரைநக ரதனி னீடும்
பதிவாரி வளவெனவே பகருமற்றோர்
பேர்மேவு கும்பரைப் புலத்தில் வாழும்
பெம்மானெங் கற்பக விநாயகன் மேல்
நார்மேவு மூஞ்சலிசை யொன்றுபாட
நாடுமவன் திருவடிகள் காப்பதாமே. 01

### நூல்

துங்கமுறு நால்வேதங் கால்களாகத்
தூய சிவா கமம வையுந் தரமதாக
அங்கமவை யோராறுங் கயிறதாக
ஆருமுப நிட தங்கள் பலகையாகப்
பொங்கு மணி யட்சரங்க ளணைகளாகப்
பொருந்து பிரணவமே யோருருவமாகக்
கங்கமிளிர் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல். 02

அம்புயனு மரியுமிகு மகிழ்விற் கூட
அமரர்புரி பல்லாண்டினகில நீடக்
கிம்புருடர் கின்னரர்கள் கீதம் பாடக்
கிளிமொழியா ரரமகளிர் நடனமாடத்
தும்புருநா ரதரிசையின் யாழை நாடச்
சூழவரு கணநாதர் தாளம் போடக்
கம்புலவுங் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல். 03

ஏரணவுங் கண்ணாடி கவரி காட்ட
இலகு குடை கொடியால வட்ட நீட்டத்
தோரணங்கண் மாலை நிரை துவசம் பூட்டச்
சோபிதமாய்த் தீப நிரையிருளை யோட்டப்
பாரணமா நிவேதனங்கள் பலவு மூட்டப்
பரவுமெழின் மாதருயர் வடந் தொட்டாட்டக்
காரணிசெய் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல். 04

எண்ணிய வாண் டொரு நூறொடைம்ப தின்முன்
இரவிசிதம் பரவுடையா ரிசைந்த பூசை
பண்ணியவா றவர் தோன்றல் காசிநாதர்
பரித்தபடி சேய்சுப்ப வுடையார் போற்றிப்
புண்ணியமார் புத்திரப் பேறடைய வேண்டிப்
புரியுமடா லயமதனிற் பொலிந்த மூர்த்தி
கண்ணியமார் கும்பரைப் புலத்தில் வாழும்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல். 05

நற்கனக சூரியர்தம் மரபு பேணி
ஞால மிளிர் சுப்பவுடையாரின் செம்மல்
சற்குணனி ராமநாதன் தலைமை போற்றச்
சாருமசு பதிநாளி னங்கு ரித்த
பொற்கலைதேர் மகன்புநருத் தாரணஞ்செய்
பொருவிறிருப் பணிக் கோயிலுறை யுந்தேவ
கற்கசரில் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல். 06

அணியிலகு கோயிற்ப திட்டை யாதி
அரியதிருத் தொண்டினிடை மனமதாரக்
குணியிலகு நிதிகோலி வருடந்தோறும்
குலவு பணிபற்பலவுஞ் செய்வோர் மேலும்
மணியிலகு சுதர்முதல பாக்கியங்கள்
மருவிய நல் வாழ்வருளுங் கடவுணீடுங்
கணியிலகு கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல். 07

மூவடியார் திருமேனி பொலிவு பூப்ப
முடிமுதலா மணிப்பணிகளிருள்கால் சீப்பச்
சேவடிகள் சேவிப்போர் கரங்கள் கூப்பச்
சேரருளிற் சித்திபுத்தி மகிழ்ந்து காப்பக்
கோவடையுந் தேவர்மலர் மாரிதூர்ப்பக்
கும்பமுனி தனக்கருளும் விமலநாத
காவடையுங்கும் பரைப்புலத்தில் வாழும்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல். 08

உலகவுரு வானரத மதனிலூர்ந்து
உம்பருடனிம் பரமேயினிது போற்றும்
அலகிறிருவமை விழாச் சிறப்புப் பூசை
ஆயமுறை நியமமாக வாண்டு தோறும்
இலகவினி தாற்றுமெச மானன்றானும்
இருநிதிய மீய்குநரு மென்றும் வாழக்
கலைகள்மிகு கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பகவி நாயகரே யாடீரூஞ்சல். 09

வேதமுதற் பொருளான தேவே போற்றி
வேண்டுவா மெவையுமரு டருவோய் போற்றி
பாதிமதி சூடியருள் பகவ போற்றி
பன்னிருகை வேலவனார் முன்னோய் போற்றி
மாதுவல வைக்கினிய மணாளபோற்றி
வஞ்சனையார் கயமுகனை வதைத்தாய் போற்றி
காதரமில் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல். 10

சிவைதருசீ ரைங் கரரே யாடீரூஞ்சல்
தேறாதார் பயங்கரரே யாடீரூஞ்சல்
சுவைதரு சீர்ப் பரம்பொரு ளீராடீரூஞ்சல்
தூயர்வர்தம் மனப்பொருளீ ராடீரூஞ்சல்
குவைதருமோங் காரமுளீ ராடீரூஞ்சல்
கதைதருபூங் கும்பரைப் புலத்தில் வாழுங்
கற்பக விநாயகரே யாடீரூஞ்சல். 11

## வாழி

மன்னுமறை யந்தணர் பின்னோர்கள் வாழி
படியிலுயர் மழைவழஞ் சுரந்து வாழி
தன்னிகரில் சைவநெறி சிறந்து வாழி
தருவளரு மமரரொடு சுரபி வாழி
கன்னியர்கள் கற்பு நெறிநின்று வாழி
காரைநகர் கும்பரைப் புலத்தில் வாழும்
சொன்னநிறை கற்பக விநாயகன்றன்
சுகிர்த திருவருணீடு வாழி வாழி. 12

## எச்சரீக்கை

மூவாமுழு முதலேகஜ முகனே யெச்ச ரீக்கை
மூவர் முதற் றேவர்பணி மூர்த்தி யெச்சரீக்கை
தூர்வாசமி மந்தாரைகொள் சோ தீ யெச்சரீக்கை
தொலையாப்பவத் தழுந்தாதருள் தோன்றா லெச்சரீக்கை
தூவேலவன் முன்னேவரு துணைவா வெச்சரீக்கை
தொன்மைக்கர மைந்தோடொளிர் தூயாவெச்ச ரீக்கை
பூ வார் பொழிற் காரைநகர் பொலிவா யெச்ச ரீக்கை
புகழார் கும்பரைப் புலத்தடியாரருட் புனிதா வெச்சரீக்கை.

## பராக்கு

ஓமெனுயர் பிரணவசொ ரூபா பராக்கு
உம்பர்பணி யம்பொனடி யுடையாய் பராக்கு
தோமில்சிவ சக்திதரு சுதனே பராக்கு
துன்னுகண நாதர் புகழ் ஸ்வாமி பராக்கு
வாமமுறு வலவைபுணர் மகிணா பராக்கு
வஞ்சமிலர் நெஞ்சநிறை வரதா பராக்கு
சேம மிகு காரைகும்பரைப் புலத்தடியாய் பராக்கு
செகமுணர வரிபர தேவா பராக்கு.

## மங்களம்

திருவந்த சதுர்மறைப் பிரகாச பிரணவந்
திகழ்ரூப திருமங்களம்
சிவகுமர மலரகித சின்மயப ராநந்த
செகதீச திருமங்களம்
அருமந்த ராமனுறு மதிவீர கத்திதெறு
மபிதான திருமங்களம்
அடர்சூர னுரனூறு முருகேசன் முன்னவா
அமரேச திருமங்களம்
மருவந்த குழன்மாது வல்லபையின் பெருநேச
மணவாள திருமங்களம்
மகிமீதெ னிதமூறு விசுவாச கணநாத
வரதீர திருமங்களம்
உருவந்த லட்டுகமொ டங்குசம் பாசகர
மொளிர் தேச திருமங்களம்
உயிர்காரை நகர் மேவு கும்பரைப்புலப் பதிவாச
வுமைபால திருமங்களம்.

திருச்சிற்றம்பலம்

முற்றுப் பெற்றது.

உ

# திருப்பொன்னூசல்

(மாணிக்கவாசக சுவாமிகள் திருத்தில்லையில் அருளியது)

**திருச்சிற்றம்பலம்**

சீரார் பவளங் கால் முத்தம் கயிறாக
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாராயணன் அறியா நாள் மலர்த்தாள் நாயடியேற்(கு)
ஊராகத் தந்தருளும் உத்தரகோசமங்கை
ஆரா அமுதின் அருள்தாள் இணைபாடிப்
போரார் வேல் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ. (1)

மூன்(று) அங்(கு) இலங்கு நயனத்தன் மூவாத
வான்தங்கு தேவர்களும் காணா மலரடிகள்
தேன்தங்கித் தித்தித்(து) அமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன்தங்கி நின்றுருக்கும் உத்தரகோசமங்கைக்
கோன்தங்(கு) இடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங்(கு) அனநடையீர் பொன்னூசல் ஆடாமோ. (2)

முன்ஈறும் ஆதியும் இல்லான் முனிவர் குழாம்
பன்னூறு கோடி இமையோர்கள் தாம் நிற்பத்
தன்நீ(று) எனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி உத்தரகோசமங்கை
மின்னேறு மாட வியன்மாளிகை பாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. (3)

நஞ்சமர் கண்டத்தன் அண்டத்தவர் நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தரகோசமங்கை
அஞ்சொலாள் தன்னொடும் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்(று) அமுதம் ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ. (4)

ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர் குழாம்
நாணாமே உய்ய ஆட்கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ . (5)


மாதாடு பாகத்தன் உத்தரகோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருட்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்(டு) என் தொல்பிறவித்
தீதோடா வண்ணம் திகழப் பிறப்பறுப்பான்
காதோடு குண்டலங்கள் பாடிக் கசிந்(து) அன்பால்
போதோடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ . (6)

உன்னற்(கு) அரிய திரு உத்தரகோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடும் அணிமயில்போல்
என்னத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்ஒத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. (7)

கோல வரைக்குடுமி வந்த குவலயத்துச்
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால மிகப்பரி மேற்கொண்டு நமையாண்டான்
சீலம் திகழும் திரு உத்தரகோசமங்கை
மாலுக்(கு) அரியானை வாயார நாம்பாடிப்
பூலித்(து) அகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ. (8)

தெங்குலவு சோலைத் திரு உத்தரகோசமங்கை
தங்குலவு சோதித் தனிஉருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்(டு) எந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ. (9)

திருச்சிற்றம்பலம்



Harikanan Printers, jaffna.
021-2222717, 4590123